பக்கங்கள்; நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6·00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 மாசி 9 புதன்கிழமை (21-02-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 87

# கொழும்பு மகஸின் சிறையில் தமிழ்க் கைதிகள் மீது தாக்கு!

## ஜெயிலர்கள் வெறியாட்டம் நால்வரின் கதி தெரியவில்லை

கொழும்பு, பெப்ரவரி. 21

கொழும்பு வெலிக்கடை மகஸின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் அங்குள்ள ஜெயிலர்களினால் தடிகள், பொல்லுகள் கொண்டு கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் பிற்பகலில் சிறைச்சாலைக் காவலர்கள் நடத்திய இந்த வெறியாட்டத்தில் தமிழ்க் கைதிகள் பலர் படுகாயமடைந்தனர். படுகாயமுற்ற நான்கு தமிழ்க் கைதிகளின் கதி தெரியவில்லை.

நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் ஜெயிலர் கூட்டம் ஒன்று இத்தாக்குதலை நடத்தியிருக்கின்றது.

படுகாயமுற்ற பரம், லிங்கேஸ், சகீர், சந்திரசேகரம் ஆகிய நான்கு கைதிகளின் கதியே தெரியவில்லை என இச்சம்பவத்தில் சிக்குண்டு உயிர்தப்பிய ஏனைய கைதிகள் தெரிவித்திருக்கின்றனர்.

எனினும் ஜெயிலர்கள் தாக்குதல் நடத்தியதற்கான காரணம் என்னவென்பது குறித்து தகவல் ஏதும் வெளியாகவில்லை.

பயங்கரவாதத் தடுப்புச்சட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகள் தாக்கப்பட்டமை குறித்து உடன் விசாரணை நடத்த உத்தரவு

### குமாரின் மனுவின் மீது மேல் நீதிமன்றம் கட்டளை

கொழும்பு, பெப். 21

கொழும்பு வெலிக்கடை மகஸின் சிறையில் தமிழ்க் கைதிகள் ஜெயிலர்களினால் கொடூரமாகத் தாக்கப்பட்டது குறித்து விசாரணை நடத்தி உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்கும்படி கொழும்பு நீதிமன்ற நீதிபதி ரைற்றஸ்ட் கூரே உத்தரவிட்டிருக்கின்றார்.

சட்டமா அதிபர், கொழும்பு பொரளை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சிறைச்சாலை ஆணையாளர் ஆகியோருக்கே நீதிபதி இந்த உத்தரவை விடுத்தார்.

தமிழ்க் கைதிகள் தாக்கப்பட்டமை குறித்து தமிழ்க் கைதிகளின் சார்பில் சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் நேற்று தாக்கல் செய்த மனுவின் மீதே இந்த உத்தரவு விடுக்கப்பட்டது.

தாங்கள் தாக்கப்பட்டமை குறித்து தமிழ்க் கைதிகள் சிலர் தமது சட்டத்தரணி குமார் பொன்னம்பலத்திடம் முறைப்பாடு செய்ததாகவும்—

அதனையடுத்து கொழும்பு மேல் நீதிமன்றங்களில் பணிபுரியும் ஆறு நீதிபதிகளில் மூவரின் கவனத்துக்கு இந்த விடயத்தை சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் கொண்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

நீதிபதி ரைற்றஸ் கூரே முன்னிலையில் எழுத்து மூலமான மனு ஒன்றையும் குமார் பொன்னம்பலம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல்

கொழும்பு, பெப். 21

ரோந்து சென்ற படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம்மாலை மட்டக்களப்பு மாவட்டம் புலிபாய்ந்த கல் என்ற இடத்தில் மோதல் இடம் பெற்றதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்றுக்காலை தெரிவித்தது.

தொப்பிக்கல காட்டை நோக்கி ரோந்து சென்ற படையினருடனேயே புலிகள் மோதினர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

## நோர்வேயில் மாநாடு

''இலங்கையில் மோதலும், சர்வதேச பிரதிபலிப்பும்'' என்ற தொனிப் பொருளில் மாநாடு ஒன்று எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை நோர்வேயில் நடைபெறவிருக்கிறது.

நோர்வே வெளியுறவு அமைச்சின் அனுசரணையுடன், இலங்கைக்கான சர்வகட்சி ஒருமைப்பாட்டுக் குழுவின் ஒத்துழைப்புடன், நோர்வே நிறுவனம் ஒன்று இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.

நோர்வேயின் ஓஸ்லோ நகரில் உள்ள இந்த நிறுவன அலுவலகத்திலேயே மாநாடு நடைபெறும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைச் சங்கத்தை அழைத்து ஜனாதிபதி பேச்சு

வடக்கு - கிழக்கில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஆற்றும்பணிகள் குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் உயர் மட்டக் குழுவுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையில் பேச்சு வார்த்தை இடம் பெற்றுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி அலரி மாளிகையில் நடந்த இந்த சந்திப்பின் போது வடக்கு - கிழக்கு பகுதிகளின் நிலைமை குறித்தும் இடம்பெயர்ந்த மக்களின் புனர் வாழ்வுப் பணிகள் குறித்தும் பேச்சுக்கள் நடந்தன.

''ஜனதிபதி அழைத்தார் சென்றோம். பேசினோம்'' என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரியான போல் பேர்த் இந்த சந்திப்புக்குப்பின்னர் தெரிவித்தார்.

(இ-3)

## 3 பிக்குகள் கைது!

கொழும்பு, பெப். 21

நாரஹேன்பிட்டி விகாரையில் கைது செய்யப்பட்ட தர்மலிங்கம் என்பவரை விசாரணை செய்ததை அடுத்து அந்த விகாரையைச் சேர்ந்த 3 பிக்குகள் பொலீஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

தர்மலிங்கம் குறித்த தகவல்களைப் பெறுவதற்காக இந்த பிக்குகள் விசாரிக்கப்படுவதாகவும் —

இவர்களுக்கு எதிராக எந்த வித குற்றச்சாட்டுக்களும் இல்லை என்றும் — பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

(இ-3-6)

## மார்ச் 18 ஆம் திகதி முதல் மருத்துவ பீடம் இயங்கும்

### விரிவுரைகள் கைதடியில்

சாவகச்சேரி, பெப். 21

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் அடுத்த மாதம் 18 ஆம் திகதியில் இருந்து இயங்கவிருப்பதாக மருத்துவ பீட பேராசிரியர் க. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

மருத்துவ பீடத்தின் விரிவுரைகள், மற்றும் பணிகள் கைதடியில் உள்ள சித்தமருத்துவ பீடத்தில் நடைபெறும் என்றும் —

பரிசோதனைகள் மற்றும் செய்முறைகள் மந்திகையில் உள்ள ஆஸ்பத்திரியில் ஏப்ரல் முதல் நடைபெறும் என்றும் — அவர் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக கவுன்ஸில், மூதவைக் கூட்டங்கள் நேற்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் உப-அலுவலகத்தில் துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் தலைமையில் நடைபெற்றன.

விரிவுரைகளை ஆரம்பிப்பது, பரீட்சைகளை நடத்துவது பற்றி முடிவு செய்யுமாறு. அந்த, அந்தப்பீடங்களைக் கேட்பதென கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (இ-3-7)

## ஸிம்பாப்பே கிரிக்கெட் அணிக்கு 250 கொமாண்டோக்கள் பாதுகாப்பு

### பரபரப்பான சூழ்நிலையில் இன்று போட்டி ஆரம்பம்

கொழும்பு, பெப். 21

கொழும்பு எஸ். எஸ். ஸி. விளையாட்டு மைதானத்தில் இன்று பரபரப்பான சூழ்நிலையில் நடைபெறவிருக்கும் ஸ்ரீலங்கா-ஸிம்பாப்பே அணிகளுக்கிடையேயான கிரிக்கெட் போட்டியை யொட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 250 கொமாண்டோக்கள் ஸிம்பாப்பே அணிக்குப் பாதுகாப்பு அளிப்பர்.

ஸிம்பாப்பே அணி தங்கவிருக்கும் ஹோட்டலில் உள்ள ''ஆஸ்றே'' முதல் கதிரைகள் வரை படையினரால் சோதிக்கப்பட்டன என்றும்—

எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் ''ஸ்கோர்'' வெளியிடும் பலகைக்கு அருகில் நின்ற பாரிய மரம் நேற்று தறித்து வீழ்த்தப்பட்டதாகவும் — பி. பி. ஸி. தெரிவித்தது.

கிரிக்கெட் போட்டிக்காக உச்ச அளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும்—

நேற்றில் இருந்தே கிரிக்கெட் விளையாடும் மைதானத்திலும், அதைச் சுற்றியும் கொமாண்டோப்படை நிறுத்தப்பட்டுள்ளது என்றும்—

ஸிம்பாப்பே அணியினர் தங்கும் ஹோட்டலுக்கு அருகில் உள்ள கடலில் கடற்படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர் என்றும் — பி. பி. ஸி. தெரிவித்தது.

போட்டியை பார்க்க வருபவர்கள் கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ஸிம்பாப்பே அணி நேற்று இலங்கை வந்து சேர்ந்தது.

(இ-3)

## தாக்குதல் நடத்தியவர்களில் ஒரு ஜெயிலர் நீதிமன்றில் அடையாளம் காணப்பட்டார்

கொழும்பு, பெப். 21

வெலிக்கடை மகஸின் சிறையில் தமிழ்க் கைதிகளைத் தாக்கிய ஜெயிலர்களில் ஒருவரை தாக்குதலுக்கு இலக்கான கைதிகளில் இருவர் நீதிமன்றத்தில் அடையாளம்காட்டினர்.

இந்தச் சம்பவம் கொழும்பு மேல் நீதி மன்றத்தில் நேற்று இடம் பெற்றது.

கைதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் சமர்ப்பித்த மனு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே கைதிகள் இருவர் தம்மைத் தாக்கிய ஜெயிலரை அடையாளம் காட்டினர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டு நீதி மன்றத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்த இரு கைதிகளே, சட்டத்தரணி குமார் பொன்னம்பலத்தின் மனு நீதிமன்றத்தில் எடுத்துக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்த ஆண்டுக்குள் யுத்தம் முடிந்துவிடும்

### அனுருத்த கூறுகிறார்

கொழும்பு, பெப். 21

எமது நாட்டின் பொருளாதார வளத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்து வரும் வடக்கு - கிழக்கு யுத்தம் இந்த ஆண்டில் முடிவுக்கு கொண்டுவரப்படும். எனவே கடந்த வரவு செலவுத்திட்டத்தில் யுத்தத்துக்கென ஒதுக்கப்பட்ட 3900 கோடி ரூபாவில் ஒரு பகுதியை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்தலாம்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனல் அனுருத்த ரத்வத்த ஹரிஸ்பத்துவவில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

ஆட்சி பீடத்தில் உள்ள எம்மை ஒருவர் பின் ஒருவராக ஒழித்துக் கட்டினாலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போராட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கும். அரசியல் படுகொலைகள் எம்மை பின்வாங்கச் செய்து விடும் என விடுதலைப்புலிகள் கருதிவிடக் கூடாது என்றும் அவர் கூறினார். (இ-3)

## கொழும்பு தவிர்ந்த ஏனைய மாவட்ட பாடசாலைகளைத் திறக்க முடிவு

கொழும்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் தவிர்ந்த, நாட்டில் உள்ள ஏனைய பாடசாலைகள் அனைத்தும், எதிர்வரும் திங்கட்கிழமை மீண்டும் திறக்கப்படும்.

கொழும்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் திறக்கப்பட்டு 5 நாள்களுக்குள் அதாவது மார்ச் மாதம் முதலாம் திகதி முன்னராக சகல பாடசாலை அதிபர்களும், பெற்றோர், ஆசிரியர்கள், மாணவ தலைவர்கள் ஆகியோரை அழைத்து தங்கள் தங்கள் பாடசாலைகளின் பாதுகாப்பு நிலைமை குறித்து ஆராய வேண்டும் என்று இந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தை கூட்டுவதற்கு முன்னராக அதிபர்கள் தமது பகுதியில் உள்ள பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடனும் கல்வி பணிப்பாளர்களுடனும் கலந்தாலோசனை நடத்தவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

(இ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

முதிரைப் பலகை நீளம் 3 அடி முதல் 10 அடி வரை. அகலம் 6 அங்குலம் முதல் 12 அங்குலம். கனம் 1 அங்குலம் முதல் 1¼ அங்குலம். முதிரை தீராந்தி பல அளவுகளில். தொடர்பு: திருமதி இ. இரத்தினபாலசிங்கம், கல்வயல் வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

(40685)

### தேவை

டீப் பிறீஸர் (Deep Freezer) தேவை விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். இல: 533, C/o உதயன், சரசாலை தெற்கு (கனகம் புளியடிச் சந்திக்கு அண்மையில்) சி/4057)

நல்ல நிலையிலுள்ள பொலித்தீன் ஒட்டும் கருவி (Polythene Sealer) உடன் தேவை. விலை விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இல: 534 C/o உதயன், சரசாலை தெற்கு, (கனகம்புளியடிச் சந்திக்கு அண்மையில்)

(சி/4058)

அலுமாரி, பின்னல்செற்றி செற், இரும்புபெட்டி (அயன் சேவ்) மற்றும் வீட்டுத்தளபாடங்கள். உடன் தொடர்பு கொள்ளவும். மனோகரன் (C.T.P), சரசாலை தெற்கு, கனகம்புளியடிச்சந்தி.

(40505)

தரமான ஒலிபெருக்கி சாதனம் தேவை. தரம்-60w. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: போரூட், சுப்பர் மடம், பருத்தித்துறை.

(40138)

### A/L இரசாயனம்

முன்னாள் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியரும், கொழும்பு வளாகத்தில் கற்பித்தல் அனுபவமுள்ளவருமான B.Sc. [Cey] ஆசிரியரினால் முக்கியமான இப்பாடப்பிரிவு பிரத்தியேகமாக உங்கள் வீட்டில் கற்பிக்கப்படும். தொடர்பு: இல. 531, மே/பா உதயன்.

(40773)

## தென்மராட்சி கல்விக்கோட்டம் அதிபர் கூட்டம்

தென்மராட்சி, பெப். 21

தென்மராட்சிக் கல்விக்கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை 22ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறும் என பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் அறிவித்துள்ளார்.

(இ-117)

யாழ்ப்பாண பல்கலைக் கழகம், இலங்கை.

### விஞ்ஞான சபைக் கூட்டம்

மேற்படி கூட்டம் 22. 02. 96 அன்று பி. ப. 2. 00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சாவகச்சேரிப் பிரிவு விஞ்ஞான பீடத்தில் நடைபெறவுள்ளது. சபை அங்கத்தினர்கள் இதில் பங்குபற்றும்படி அழைக்கப்படுகின்றனர்.

பதில்
விஞ்ஞான பீடாதிபதி
19. 02. 96

(C/4059)

# எழுதுநர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தோர்

சாவகச்சேரி, பெப். 21

அரசாங்க சேவையின் எழுதுவினைஞர் மற்றும் அதனையொத்த சேவைகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக 1994- 1995 இல் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தோரின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் இம்மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இயங்கும் யாழ். செயலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை வியாழக்கிழமை யாழ். செயலக நிர்வாக அதிகாரியைச் சந்தித்து விருப்பு உரிமைப் படிவத்தைப்பெற்று பூர்த்தி செய்து கொடுக்குமாறு இவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 25 பேருக்கு ஏற்கனவே நியமனங்கள் வழங்கப்பட்டுவிட்டன.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள 73பேர்களினதும் பெயர் விவரம்வருமாறு :-

கே. சுதாகரன் — நீர்வேலி மத்தி, என். மகாலட்சுமி — அரியாலை, எஸ். சுகதாஸ் — கோப்பாய், ஆர். அனுஷன்— யாழ்ப்பாணம், பி. சுகந்தி — சுதுமலை வடக்கு, கே. சிவசுதன் — கரணவாய் வடக்கு, என். கமலானந்தினி — மந்துவில் கிழக்கு, ரி. பவானி — மானிப்பாய், எஸ். ரகுராம்— இணுவில், வி. நந்தினி —துன்னாலை மத்தி.

கே. சேரலாதன் — திருநெல்வேலி, என். ஜெயலலிதா— சங்கானை, எஸ். சிவகுமாரன் — தெல்லிப்பழை கிழக்கு, பி. மகாலிங்கசிவம் -- கொக்குவில் மேற்கு, என். சந்திரவதனி — நெல்லியடி, எம். மைதிலி — யாழ்ப்பாபாணம். என். மோகனாம்பிகை — கோப்பாய் வடக்கு, ஜி. சுருணபவானி — அராலி தெற்கு, கே. ரமேஷ் — அல்வாய் கிழக்கு, எம். முரளி — பருத்தித்துறை.

வி. எஸ். தேவாந்தினி — மறவன்புலோ, பி. கவிதா — யாழ்ப்பாணம், ஜி. நிர்மலாதேவி, — பருத்தித்துறை, ரி. ஜெகதீஸ்வரி—வேலணை-8, எஸ். ரஜனி — யாழ்ப்பாணம், எஸ். மஞ்சுளா — யாழ்ப்பாணம், கே. ஞானசரஸ்வதி — யாழ்ப்பாணம், ஏ. முரளிதரன் — கோண்டாவில் கிழக்கு,கே. நடராஜா — புலோலி தெற்கு, எஸ். திவாகரன் — கரவெட்டி.

கே. உதயாயனி — நுணாவில் சந்தி, ஐ. ரேணுகா — கோப்பாய் வடக்கு,ஏ.கௌரி — அரியாலை மேற்கு, எஸ். சுதாகரன் — மட்டுவில் வடக்கு, எஸ். சந்திரகலாதரி — மயிலணி, ஆர்.எஸ். சுகந்தராஜா—அளவெட்டி,பி.ஜெயகீதா — அல்வாய் வடக்கு, ஏ. பிரவணபவா — புலோலி தெற்கு, கே. எஸ். விஜயாலயன் — வியாபாரிமூலை, ரி.நந்தினி—புலோலி கிழக்கு.

ஆர். தேன்மொழி — கைதடி, பி. ஆனந்தி— தெல்லிப்பழை, எம்.பி. டிரஞ்சன் — யாழ்ப்பாணம், ரி. தர்மேந்திரா — கொக்குவில், ரி. தர்சினி — யாழ்ப்பாணம், ஜே. வனிதா — கரவெட்டி மத்தி, எம். சுஜிதா — அளவெட்டி வடக்கு, ரி. அனுஷா — வண்ணார்பண்ணை, எஸ். துஷியந்தி — யாழ்ப்பாணம், பி. செந்தாமரை — திருநெல்வேலி.

பி. தர்மசீலன் — அளவெட்டி வடக்கு, எஸ். மொழியரசி — கட்டுவன் மேற்கு, ரி. கலைச்செல்வன் — இமையாணன், ஜி. சூரியகுமார் — நவிண்டில், வி. வேர்ளினி — யாழ்ப்பாணம், ரி. அருள்ராஜ் — புத்தூர் மேற்கு, என். காயத்திரி — கரவெட்டி மேற்கு, எஸ். மதுராந்தகி — அல்லாரை வடக்கு, எஸ். சுகுமாரி — கொக்குவில் மேற்கு, ரி. ஜெகந்தி — நல்லூர்.

சி. கௌரி — கரவெட்டி மேற்கு, கே. மேனகா — கரணவாய் தெற்கு, எஸ். கெங்கா — புலோலி மேற்கு ஆர். ஜானகி — வட்டு. கிழக்கு, ஆர். கோதர்ஜனா — யாழ்ப்பாணம், ஆர். ராஜ்ஹரன்— கொக்குவில் மேற்கு, பி. நாமகள் — கந்தர்மடம், பி. ரமணன் — தொல்புரம், எஸ். சின்னத்தம்பி — தெல்லிப்பழை ஏ. வாதவூரன் — கரணவாய் சிழக்கு.

எஸ். பாலகௌரி — புலோலி மேற்கு, எஸ். பிரபா — துன்னாலை வடக்கு, வை. சுபாமதி — வவுனியா.

## யா/ சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயம்

இன்று (21-02-1996) காலை 10-30 மணிக்கு சாவகச்சேரி றோ. க. பாடசாலைக்கு ஆசிரியர்கள் அனைவரும் தவறாது சமுகம்தரவும்.

S.S. தங்கராஜா
அதிபர்

(40688)

## யா / பெரியபுலம் மகா வித்தியாலயம்

ஆசிரியர்கள் அனைவரும் **22-02-1996** வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்துக்குத் தவறாது வருகை தரவும்.

க. கனகசிங்கம்,
முதல்வர்.

(40687)

## தர்மிசா ரவல்ஸ்

இன்று, பிரயாண ஒழுங்குக்காக பதிவு செய்த நோயாளர்களும், வயோதிபர்களும் எமது அலுவலகத்தில் காலை 9. 30 க்கு சமுகம் தரவும்.

(40691)

## சிவராஜலிங்கம் - கணக்காளர்

ஆனைக்கோட்டை புற்கை தின்னிப் பிள்ளையார் கோவிலடி கணக்காளர் சிவராஜலிங்கம் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

த. சகாதேவன்,
மே/பா. K. இராசையா,
கொச்சிமா வளவு,
புலோலி தெற்கு,
புலோலி.

[உபய கதிர்காமம்,வீரபத்திரர் கோவில் முன் ஒழுங்கை]

(40301)

## தேவை

நல்ல நிலையில் உள்ள VOLTAGE STABILIZER தேவை. **220** V, **2000** W ரகம். வைத்திருப்போர் நேரில் கொண்டுவரவும்.

உதயன் பணிமனை,
பருத்தித்துறை வீதி,
(கனகம்புளியடிச் சந்திக்கு சமீபமாக)
சரசாலை.

## கொமர்ஷல் வங்கி அறிவித்தல்

தற்போதைய சூழ்நிலை காரணமாக நிலையான கட்டளைகளை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளமையை மனவருத்தத்துடன் அறியத் தருகிறோம். மறு அறிவித்தல் வரை கொடுப்பனவுகளை நேரடியாகவே பெறுநர்களிடம் வழங்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

— முகாமையாளர்

(C/4051)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

### கமலாம்பிகை விசுவலிங்கம்

(சந்தை வீதி, உடுப்பிட்டி)

தோற்றம்: **23 - 05 - 1917**

மறைவு: **03 - 03 - 1995**

திதி: 21 - 02 - 1996

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டென்ன பல ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவும்,பிரிவும், பாசமும் எங்களை விட்டு அகலாது – அம்மா உங்கள் ஆசை எதுவோ அதையும் நிறைவேற்றி வைத்தோம் அம்மா.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(40149)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

திருமதி

### சிவகாமிப்பிள்ளை தப்பையா

(வட்டு. மேற்கு)

மறைவு: 22 - 01 - 1996

அன்பின் சிகரமாய், பண்பின் பிறப்பிடமாய் வாழ்ந்து, எம்மை யெல்லாம் ஆளாக்கி வைத்த எம் அன்புத் தெய்வமே தாயே, உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

மக்கள்,
ஆனந்தரத்தினம், ஆறுமுகநாதர்,
நித்தியரத்தினம்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"பொன்பதி"
உடுப்பிட்டி.

(40796)

## மரண அறிவித்தல்

### சிவஞானசுந்தரம் சின்னத்தங்கம்

(கைதடி கிழக்கு)

கைதடியை சேர்ந்த சிவஞானசுந்தரம் சின்னத் தங்கம் நேற்று 20-2-96 காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிவஞானசுந்தரத்தின் அன்பு மனைவியும், ஸ்ரீஸ்கந்தராசா (புருணை), சிவசண்முகராசா (நியூஸிலாந்து), செல்வராசா (ஆசிரியர், பண்டத்தரிப்பு இந்து கல்லூரி), குமாரகுலசிங்கம் (சுவிஸ்), இராஜலோஜினி, கௌரியம்மா ஆகியோரின் பாசமிகு தாயாரும்,ஜமுனா, சுமதி, ராஜபுஸ்பம், பிரேந்திரா, மனோகரன், செல்வதாஸன் ஆகியோரின் அருமை மாமியாரும்,அனோஸ், ரனுஸ்கா, திவாஜினி, இமாஜினி, சுதர்சன், டினர்சன், ஜனர்சன்,சுவேகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இராசம்மா, கந்தையா (சுண்டிக்குளி) ஆகியோரின் அருமை சகோதரியும், திருநாவுக்கரசு, நாகேஸ்வரியின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன் கிழமை 21-2-96 காலை 11 மணி தடைபெற்று ஊற்றல் மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்குமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
வெ. செல்வதாசன்
(மருமகன்)

"ஸ்ரீ கௌரி",
கைதடி கிழக்கு.

(40690)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மறுப்பது ஏன்?

இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மூன்றாவது நாடு ஒன்றின் மத்தியஸ்தம் தேவை என்பது லண்டனில் சர்வதேச ''அலேர்ட்'' நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மாநாட்டில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. தென்னாபிரிக்காவில் இருந்து கலந்து கொண்ட பிரதிநிதிகள் தமிழர் பிரச்சினையை அரசு தனியாகப் பேசித் தீர்க்க முடியாது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், அரசாங்கம் விடுதலைப் புலிகளைத் தவிர்ந்து, யதார்த்த நிலைக்கு அப்பாற்பட்டு பேச்சுக்களை நடத்த முயல்வதைச் சுட்டிக்காட்டி உள்ளார்.

ஸ்ரீலங்காவின் சந்திரிகா அரசாங்கத்தைப் பொறுத்தளவில், இனப்பிரச்சினையை மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் இன்றியும், விடுதலைப் புலிகளை ஓரங்கட்டிவிட்டும் தீர்க்கவேண்டும் என்ற நோக்கத்துடனேயே அது செயற்படுகிறது.

மூன்றாம் தரப்பு ஒன்றின் மத்தியஸ்தத்துடன் பேச்சுக்களை நடத்துவதானால், தமிழர்களின் நியாயமான உரிமைகளை — குறிப்பாகத் தமிழர் தாயகத்தில் தன்னாட்சி உரிமைகளை — வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகலாம் என்று அது அஞ்சுகிறது.

அதேபோல, அதிகாரப் பரவல் என்ற பெயரில் தமிழர்களுக்கு அற்ப சொற்ப சலுகைகளை வழங்கும் தீர்வுத் திட்டம் எதனையும் விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதால் அவர்களுடன் பேசுவதற்கு அரசு விரும்பவில்லை.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க்கட்சிகளுடன் மட்டும் பேசி, தமிழர்களுக்கான உரிமைகளை அரை வேக்காட்டாகக் கொண்ட, அரை குறைத் தீர்வு ஒன்றை இலகுவாகத் திணித்து விடலாம் என்று அரசு திட்டமிட்டுள்ளது. இராணுவ ரீதியாகத் தமிழர்களின் பலத்தை நிலைநிறுத்த முடியாத இந்தத் தமிழ்க்கட்சிகள் எதனைக் கொடுத்தாலும் கையேந்தி வாங்கக் கூடிய நிலையில் உள்ளன. என்பதனைச் சந்திரிகா அறிந்து வைத்திருக்கிறார்.

அதனாலேயே விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தப் போவதாகக் கூறி இராணுவத் தீர்வை நாடுகிறார். தமிழர்களுக்குரிய நியாயமான உரிமைகளை வழங்காது அரைகுறை உரிமைகளை வழங்க வேண்டும் என்ற உள்நோக்கம் இருப்பதாலேயே அரசியல் தீர்வுக்கு முழு மனதுடன் செயற்படாமல் இராணுவத் தீர்வின் பக்கம் கூடுதல் கவனமும் அக்கறையும் செலுத்துகிறார்.

இந்த உண்மை உலகத்துக்குத் தெரியாது என்றும் தமது நடிப்பை, வேடத்தை வெளிநாடுகள் கண்டுகொள்ளவில்லை என்றும் சந்திரிகா நினைக்கிறார். மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் இன்றிப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரக் கூடிய திறமை தமக்கு உண்டென்றும் காட்டிக்கொள்ள முனைகிறார்.

பேச்சுவார்த்தைகளின் போது தனது எண்ணத்தை அடைவதற்கு, தனது மேலோங்கித் தனத்தைக் காட்டுவதற்கு தனது இராணுவ நலன்களைப் பேணுவதற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தடையாகிப்போய் விடும், தனது பொய்மையும் நடிப்பும் வெளிப்பட்டுவிடும் என்பதாலும் மத்தியஸ்தம் வேண்டாம் என்று சந்திரிகா தலைகீழாக நிற்கிறார்!

---

### ரூ. 160 கோடி செலவில்

# எண்ணெய் குதங்களை மீள அமைக்க முடிவு

கொழும்பு, பெப். 21

விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்ட கொலன்னாவ எண்ணெய்க் குதம் 160 கோடி ரூபா செலவில் மீள அமைக்கப்படவிருக்கிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலகுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் 160 கோடி ரூபாவில் இந்த மீளமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

3 வருடத்தில் இத் திட்டத்தை பூர்த்தி செய்வதென ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் —

எதிர்வரும் 25 ஆம் திகதி இத்திட்டம் குறித்து நேரடியாக ஆராய ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் இலங்கை வரவிருப்பதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இந்த எண்ணெய் குதங்களை மீள அமைப்பது தொடர்பாக தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்க இந்தியா சம்மதம் தெரிவித்துள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## மருந்து பெறும் இடத்தில் நோயாளர்கள் சிரமம்

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் வெளிநோயாளர் பகுதி மருந்தகத்தில் மருந்து பெறுவதற்காக காத்திருக்கும் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குழந்தைகள் கிளினிக், மனநோயாளர் கிளினிக் ஆகிவற்றுக்குச் செல்லும் நோயாளரே இக்கஷ்டங்களை அனுபவிக்கவேண்டியுள்ளது.

நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை அடுத்து இந்த இரு கிளினிக் நோயாளர்களும் மருந்து எடுக்கும் பகுதி புறம்பாக்கப்பட்டுள்ளது.

இந்த நோயாளர், மருந்தகத்தின் பிற்பகுதியில் நின்று மருந்து பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனால் குழந்தைகளுடன் வரும் தாய்மார்கள் அக்குழந்தைகளுடன் வெய்யில் கால்கடுக்க நீண்ட நேரம் நின்று மருந்தைப் பெற வேண்டியுள்ளது. மனநோயளிகளுக்கும் இக்கதியே. (இ-15)

## மருந்துக்கு தட்டுப்பாடு

மட்டுவில் பெப். 21

சரசாலை அரசினர் வைத்தியசாலையில் நோயாளர் எண்ணிக்கை தினமும் அதிகரித்து வருவதால் முக்கிய மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். இராஜலிங்கம் அத்தியாவசியமான மருந்து வகைகளை அனுப்பிவைக்குமாறு யாழ். சுகாதார சேவை பிரதிமாகாண பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-135)

### கிளிநொச்சியில்

## மேலும் 3,500 குடிசைகள் அமைக்க நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் தங்கியுள்ளவர்களுக்கு குடிசை அமைக்க அரசு ஒதுக்கிய நிதி முடிவடைந்து விட்டதாக கிளிநொச்சி செயலக திட்டப் பணிப்பாளர் திரு. தி. இராசநாயகம் தெரிவித்தார்.

குடிசை அமைப்பதற்கு அரசாங்கம் 30 லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளதாகவும் —

அந்நிதியில் இருந்து 250 குடிசைகளே அமைக்கப்பட்டன என்றும் — அவர் தெரிவித்தார்.

மேலும் 3 ஆயிரத்து 500 குடிசைகள் அமைக்கவேண்டியுள்ளதாகவும் —

அவற்றை அமைக்க தேவையான கூரைப் பொருள்களை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் இரண்டாயிரத்து 600 குடிசைகளுக்கும், யாழ். அரச அதிபர் ஆயிரம் குடிசைகளுக்கும் வழங்க முன்வந்துள்ளனர் என்றும் — அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## உளப் பாதிப்புற்றோருக்கு உதவிட செயல்திட்டம்

### கிளிநொச்சியில் ஏற்பாடு

கிளிநொச்சி, பெப். 21

தற்போதைய போர்க் காலச் சூழ்நிலைகளாலும், இடம்பெயர்வு சம்பவங்களினாலும் உளப்பாதிப்புக்குள்ளாவோருக்கு உதவிட கிளிநொச்சியில் செயற்படும் ஊனமுற்றோர் புனர்வாழ்வுக்கழகம் (அறோட்) 'ஒக்ஸ்பாம்'' அமைப்புடன் இணைந்து செயல்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவிருக்கிறது.

உளப்பாதிப்புக்குள்ளாகும் மக்களை இனங்கண்டு அவர்களை பழைய நிலைக்கு கொண்டு வந்து சமுதாயத்துடன் இணைக்கும் வகையிலான நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் நோக்குடன் 150 பேரை அந்த அமைப்பு தெரிவு செய்துள்ளது.

தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு ஒரு வருடப் பயிற்சி அளிக்கவும் —

பயிற்சி முடிந்தபின் உளப் பாதிப்புள்ளவர்களை இனங்கண்டு உளவளத்துணையை அளிக்கும் பொறுப்பை இவர்களிடம் ஒப்படைக்கவும் — ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பயிற்சியாளர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்கு கடந்த வாரம் கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுக் கழக மண்டபத்தில் நடந்தது.

ஊனமுற்றோர் புனர்வாழ்வுக்கழக செயலாளர் திரு. பொன். நித்தியானந்தன், ''ஒக்ஸ்பாம்'' திட்ட அலுவலர் திரு எஸ். ரி. பத்மநாதன், ஊனமுற்றோர்கழக இணைப்பாளர் அருட்செல்வி லூட்ஸ், உளவளத்துணை விரிவுரையாளர்கள் வண. எஸ். ஜே. ராஜநாயகம், திரு. தானியல், அருட்செல்வி [illegible] திரு. [illegible] தினம் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (உ-3-9)

---

## நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை 22ஆம் திகதி காலை 10-00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கோரி உள்ளது.

★ G. M. J. யோசப் அல்லது திருமதி சுலோசனா யோசப் — Hudec, திருக்குடும்ப கன்னியர்மடம்.

★ இளையதம்பி சிவசம்பு — வரணி, சாவகச்சேரி.

★ செல்லத்துரை பாலகிருஷ்ணர் — இலங்கை வங்கி, ஒட்டுவெளி, மிருசுவில்.

★ சின்னக்குட்டி மார்க்கண்டு — மே/பா. மா. தங்கராசா, வீர்க்கா வீதி, மந்துவில்.

★ செல்வராசா விஜயராணி — மே/பா. சிவராசா, கோவிலாக்கண்டி, நாவற்குழி தெற்கு.

★ தங்கலக்சுமி நடராசா — மீசாலை மேற்கு.

★ இராஜேஸ்வரி தம்பிப்பிள்ளை — மே/பா. கந்தையா இராசரெட்ணம், கைதடி வடக்கு.

★ தவமலர் விநாயகமூர்த்தி — மே/பா. சித்தர் கந்தையா, கோணேசகிரி, கைதடி வடக்கு.

★ வீரவாகு கணேசமூர்த்தி அல்லது வசந்தினி கணேசமூர்த்தி — வயல்கரை, மீசாலை தெற்கு.

★ சினியப்பா நாகலிங்கம் — மே/பா. தங்கராசா, ''ஸ்கந்தாவாசா'', கைதடி தெற்கு.

★ சிவக்கொழுந்து யோகநாதன் — மே/பா. ஜெயபாலசிங்கம், உபதபாற்கந்தோர், எழுதுமட்டுவாள்.

★ கனகேஸ்வரி ஆறுமுகம் — 29, கைதடி வீதி, நுணாவில்.

★ சின்னையா சின்னத்துரை — கச்சாய் தெற்கு.

★ சின்னையா சிவயோகநாதன் — மே/பா. S. வினாசித்தம்பி, மீசாலை புகையிரத வீதி, சாவகச்சேரி.

★ சந்திரகுமாரி தவராசா — தம்பளைகாமம், பளை.

★ திருமதி அன்னம்மா அமிர்தாயினசிவம் — மே/பா. P. தேவராஜா, இடைக்குறிச்சிமேற்கு, ஆஸ்பத்திரி வீதி, வரணி.

★ யோகேஸ்வரி சந்திரன் — யோகமகாள், கைதடி கிழக்கு.

★ ரூபி மெஸ்சியதாஸ் — ஊர்காவற்றுறை பல. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி.

★ வேலுப்பிள்ளை விவேகானந்தன் — மே/பா. A. வேதாரணியம், நாகர்கோவில் வீதி, எழுதுமட்டுவாள்.

★ புஸ்பாம்பிகை மீனாட்சி — பெரியதம்பகாமம், பளை.

★ கமலா ராஜதுரை — அல்லாரை வடக்கு.

★ சிவசம்பு நடராஜா — மே/பா. S. ஜெபச்சந்திரன், கரம்பகம், எழுதுமட்டுவாள்.

★ திருமதி செபஸ்ரியான் தம்பிராசா — M. பவிலுப்பிள்ளை, புலோப்பளை, பளை கிழக்கு.

★ ஆறுமுகம் சிவபாலசுந்தரம் — மே/பா. தட்சனாமூர்த்தி GS அல்லது இ. கணபதிப்பிள்ளை, அல்லாரை தெற்கு, கொடிகாமம்.

★ சின்னக்குட்டி சின்னத்தம்பி — கென்ஸ் மேன் ஒழுங்கை, சாவகச்சேரி.

★ தயானந்தா சங்கரப்பிள்ளை — கம்பளி வைரவர் கோவில் ஒழுங்கை, கேரதீவு றோட், நாவற்குழி.

★ திரு. நாகராசா அல்லது திருமதி சந்திரலீலா நாகராசா — சீலன் வீதி, அல்லாரை வடக்கு.

★ நாகலிங்கம் இராமநாதன் — மே/பா ஜெயச்சந்திரன், கரம்பகம், எழுதுமட்டுவாள்.

★ திருமதி பரமேஸ்வரி சபாபதி — அல்லாரை தெற்கு, மீசாலை.

★ சிவஞானம் கந்தசாமி — K. C. றோட், சாவகச்சேரி.

★ திருமதி சரஸ்வதி செல்லையா (மகேஸ்வரி) — அல்லாரை வடக்கு, மீசாலை.

★ காணிக்கைமரியை கொறுணலியூஸ் — கிளாலி சென். அன்ரனீஸ் தேவாலயம், கிளாலி.

★ சின்னையா அகிலேஸ்வரன் அல்லது ராமலிங்கம் சிவசுப்பிரமணியம் — மே/பா பொன்னம்பலம், கைதடி வடக்கு.

★ திருமதி டெனிஸ் சதீஸ்குமார் (சதீஸ்) — மே/பா இரத்தினராசா, முல்லையடி, பளை.

★ திருமதி நல்லம்மா பூபாலசிங்கம் — புலோப்பளை மேற்கு, பளை.

★ செல்லையா கந்தசாமி — புலோப்பளை மேற்கு.

★ வினாசித்தம்பி வீரசிங்கம் — புலோப்பளை மேற்கு, பளை.

★ செல்வி கமலமோகினி சுந்தரம் — புலோப்பளை வீதி, பளை.

★ திருமதி சரஸ்வதி கனகரத்தினம் — புலோப்பளை மேற்கு, பளை.

★ வல்லிபுரம் கோபாலபிள்ளை — புலோப்பளை.

★ ரமிளா கிருஷ்ணபிள்ளை — மே/பா N. உதயச்சந்திரன், எழுதுமட்டுவாள் வடக்கு.

★ மயிலன் கந்தசாமி — நரசிம்மவைரவர் கோயில், தஞ்சம் அடைந்தவர் முகாம், மறுவன்புலோ.

★ கந்தையா மாணிக்கவாசகர் அல்லது T. பத்மநாதன் — கச்சாய் வீதி முகாம், சாவகச்சேரி.

★ மனுவேற்பிள்ளை சிறில் அல்லது பபிலோயா — மே/பா சிவபாலன், பெரியதம்பகாமம், பளை.

★ R. ஜெயானந்தன் (கொள்வனவு உத்தியோகத்தர்) — நுணாவில்.

★ குழந்தைவேலு சபாபதிப்பிள்ளை — நுணாவில் கிழக்கு.

★ முருகுப்பிள்ளை மாணிக்கவாசகர் — மே/பா த. துரைச்சாமி கெற்பலி மத்தி, மிருசுவில்.

★ சின்னத்துரை பத்மநாதன் — மே/பா தம்பாப்பிள்ளை, அம்மன் கோவிலடி றோட், வேம்பிராய், நாவற்குழி.

★ பாலசுப்பிரமணியம் அரியமலர் — 48/04, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

★ மதியாவனம் மகேஸ்வரி — 52/27, தாமரை வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

★ சின்னப்பு ராசேந்திரம் — ஆஸ்பத்திரி வீதி, தோப்பு, அச்சுவேலி.

★ சண்முகம் வேலுப்பிள்ளை — சுழிபுரம் மேற்கு.

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. சோமசுந்தரம்பிள்ளை B. A., F. C.A.
பட்டயக் கணக்காளர்

பழைய விலாசம்:
91 1/4, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

புதிய விலாசம்:
மே/பா, மேர்ச்சன்ற் பினான்ஸ் லிமிற்,
சாரையடி, பருத்தித்துறை.

(சி-4043)


# வேம்படி மகளிர் கல்லூரி

## ஆசிரியர்களுக்கு

முக்கியமான தகவல்களைப் பெறவேண்டி உள்ளதால் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை ஆசிரியர்கள் அனைவரையும், இன்று புதன்கிழமை **(21 - 2 - 96)** நெல்லியடி, சாமியன் அரசடியில் உள்ள இல்லத்தில் தவறாது சந்திக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பிரதி அதிபர்,
(சி/4061) யா/வேம்படி மகளிர் கல்லூரி.


யாழ்ப்பாணம்

## இல: 81, ஸ்ரான்லி வீதியில்

இயங்கி வந்த

# A·S· ஆறுமுகம் அன் சன்ஸ்

வியாபார ஸ்தாபனம்

இன்று முதல்

## பருத்தித்துறை வீதி, நெல்லியடியில்

இயங்குகின்றதென்பதை
வாடிக்கையாளர்களுக்கு அன்புடன்
அறியத் தருகின்றோம்.

— உரிமையாளர்
A. S ஆறுமுகம் அன் சன்ஸ்

(40782)


# தவறிவிட்டது

சுந்தரம் கலைச்செல்வன் ஆகிய நான் கிளாலியிலிருந்து வடமராட்சியை நோக்கி தமிழீழ போக்குவரத்து கழக பேரூந்தில் (இல. த1 .6238) **19- 2- 96** இரவு பயணம் செய்து கொண்டிருந்த பொழுது எனது **முக்கிய வைத்திய சான்றிதழ்களும், மருந்துவகைகளும், பாஸ்போட்டும்** உள்ளடங்கிய கைப்பை பஸ்சில் வடமராட்சிப் பகுதியில் காணாமல் போய்விட்டது. கண்டு எடுத்தவர்கள் மனிதாபிமான முறையில் எம்மிடம் ஒப்படைக்கும்படி வேண்டுகின்றோம்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

உரிமையாளர்: தொடர்பு முகவரி:

**சுந்தரம் கலைச்செல்வன்**
கரணவாய் தெற்கு,
கரவெட்டி

தகவல்:- கி. இராசதுரை (துரைராசா)
ஆசிரியர், நாவலடி,
உடுப்பிட்டி.

(40798)

# மக்கள் நலன் காக்கும் பிரிவு

## [P. W. O.]

## அறிவித்தல்

இருபாலைச் சந்தி - கோப்பாய் - இயற்றாலை இருபாலை சந்தி கோப்பாயில் இயங்கி வந்த மேற்படி அமைப்பானது தற்போது தென்மராட்சி பிரிவின் வரணி - இயற்றாலையில் தலைமையகத்தை கொண்டு இயங்குகின்றது.

**பொதுச்சபை உறுப்பினர்களுக்கானது**

மேற்படி அமைப்பின் ஆரம்பகால உறுப்பினர்களும், கிராமிய ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பொதுச்சபை உறுப்பினர்களும் அமைப்பு சார்பாக தங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய தங்களது முகவரியை **05—03—1996**க்கு முன் மேற்குறித்த விலாசத்திற்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி உதவுமாறு வேண்டுகிறோம்.

**அங்கத்தவர்கள் பயனாளிகளுக்கானது**

அங்கத்தவர்கள் மேற்படி அமைப்புடனான வழமையான தொடர்புகளையும் கடன்நிலுவையுள்ள பயனாளிகள் மீளச்செலுத்துதல் சம்பந்தமான தொடர்புகளையும் அலுவலக நேரத்தில் மேற்கொள்ளலாம் என்பதனை அறியத்தருகின்றோம்.

செயலாளர்,
மக்கள் நலன்காக்கும் பிரிவு

20-2-96. (40797)

# சிறிபாத கல்விக் கல்லூரி நேர்முகப் பரீட்சை

## அழைக்கப்பட்ட 9 பேர் விவரம்

சிறிபாத கல்விக் கல்லூரிக்கு விரிவுரையாளர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு வடக்கில் இருந்து 9 பேர் அழைக்கப்பட்டுள்ளனர் என்று வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் திரு.சிவானந்தன் தெரிவித்தார்.

அடுத்த மாதம் மூன்றாம் திகதி வவுனியா கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ள இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோருக்கான கடிதங்களை தமது அலுவலகத்தில் பெறலாம் என்றும் அவர் தெரிவித்தார்

அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

பீ.ஸ்ரீஸ்கந்தராசா (யாழ் இந்து), எஸ். அமிர்தலிங்கம் (புங்குடுதீவு, ஸ்ரீ கணேசா), பி. எஸ். மனுவேல்பிள்ளை (யாழ்ப்பாணக் கல்லூரி), செல்வி எம். வன்னியசிங்கம் (நடேஸ்வரா), திருமதி ஏ. சிவஞானசுந்தரம் (இராமநாதன் கல்லூரி), எஸ்.மகாலிங்கம் (பலாலி ஆசிரியர் கலாசாலை), ரி. காங்கேசபிள்ளை (பலாலி ஆசிரியர் கலாசாலை), பி. கணேஷ் (முள்ளியவளை வித்தியானந்தா), கே. தர்மசிறி ராஜா (ஹாட்லி). (இ-3)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1996-02-21 இரவு

- ★ 8-00 — ஆரம்பம்
- ★ 8-02 — தாயகப் பாடல்கள்
- ★ 8-10 — நாடகம்
- ★ 8-30 — செய்திகள்.
- ★ 8-40 — அறிவிப்புகள் — தொடர்ந்து 9.00 மணி வரை தாயகப்பாடல்கள்

1996-02-22 காலை

- ★ 7-00 — ஆரம்பம்
- ★ 7-02 — மாவீரர் வணக்கம் தொடர்ந்து 7-30 மணி வரை இசை மாலை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45 — அறிவிப்புகள் தொடர்ந்து 8.00 மணி வரை தாயகப் பாடல்கள்.

ஒரு ஜெயிலர்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கொள்ளப்பட்ட போது அங்கு நீதிமன்றத்துக்கு வந்திருந்த சந்திரசிறி என்ற ஜெயிலரைச் சுட்டிக் காட்டி அவரும் தங்களைப் பொல்லால் தாக்கியதாக நீதிபதியிடம் தெரிவித்தனர்.

இதனையடுத்து நீதிபதி சம்பந்தப்பட்ட ஜெயிலரை நீதிமன்றத்தில் ஆஜராக்கி, அவரின் பெயர், பதவி ஆகியவற்றைப் பதிவு செய்து மேல் விசாரணைக்கு உத்தரவிட்டார்.
(உ-3-6-7)

[illegible]கள்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
சமர்ப்பித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் மேல் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ள இந்த தமிழ்க் கைதிகள் மேல் நீதிமன்ற உத்தரவின் பேரிலேயே விளக்க மறியலில் வைக்கப்பட்டிருப்பதால் மேல்நீதிமன்றமே அவர்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பு என்றும்—

எனவே இந்த விடயத்தில் மேல் நீதிமன்றம் உடனடியாகத் தலையிட்டு அவசர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும்—

குமார் பொன்னம்பலம் வாதிட்டார். அவரின் வாதத்தை ஏற்று நீதிமன்றம் மேற்படி உத்தரவை விடுத்தது. (உ)

கொழும்பு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி
டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு— குற்றம் சுமத்தப்பட்டு — தடுத்து வைக்கப்பட்டிருக்கும் [illegible] இலக்காகியிருக்கின்றார்கள்.
(உ-3-6-7)

நோர்வே..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கையில் சமாதானத்தை காண்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிப்பணிகளுக்கு ஆதரவு தேடுவதும்—

இலங்கை நெருக்கடி தொடர்பாக ஆக்கபூர்வமான சர்வதேச பிரதிபலிப்பை ஏற்படுத்துவதற்குமான விதப்புரைகளைச் செய்வதும்— இந்த மாநாட்டின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பரிமளம் கந்தசாமி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், தற்போது அக்கராயனில் வசித்து வந்தவருமான பரிமளம் கந்தசாமி காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வரதலட்சுமி, கமலாம்பிகை, பாலசுப்பிரமணியம், பத்மநாதன், காலஞ்சென்ற இரட்ணசபாபதி, விநாயகமூர்த்தி, சிவப்பிரகாசம் ஆகியோரின் அன்புத் தாயாரும், சாரங்கபாணி, கணேசபிள்ளை, முருகாம்பாள், நாகேஸ்வரி, வேதநாயகி, வடிவாம்பிகை ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (21-2-96) அக்கராயன் மகாவித்தியாலய விடுதியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
N.K. பத்மநாதன் (மகன்)
(நாதஸ்வர வித்துவான்)

சங்கத்தானை,
சாவகச்சேரி. (40692)

வைத்திய கலாநிதி

## கணபதிப்பிள்ளை நடராசா

(மாவட்ட வைத்திய அதிகாரி, மாவட்ட வைத்தியசாலை வவுனியா, முன்னாள் சுகாதார வைத்திய அதிகாரி, சாவகச்சேரி)

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி கணபதிப்பிள்ளை நடராசா 18-2-96ல் வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யாழ்ப்பாண வர்த்தகர் மாணிக்கம் கணபதிப்பிள்ளை - விசாலாட்சி ஆகியோரின் ஏக புதல்வனும், யாழ்ப்பாணம் திருநெல்வேலி காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் தம்பதிகளின் மருமகனும், மதனிகாவின் அன்புக் கணவரும், சுகந்தினி, பிரபாகரன் (லண்டன்), பிரகலாதன் (பிரான்ஸ்), பிரதீபன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20-2-96 அன்று வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரியின் இல்லத்தில் நடைபெற்றன, இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்:
ச. கனகலிங்கம்
(40799) (மைத்துனர்)

## முருகேசு மாணிக்கம்

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு மாணிக்கம் அவர்கள் 20 - 2 - 96 செவ்வாய்க்கிழமை துன்னாலையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற முருகேசு - வள்ளியம்மை தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான திருமதி சிவக்கொழுந்து, செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அரச உத்தியோகத்தர் நாகராஜா, திருமதி கமலாதேவி, துரைராஜா (சாலைப்பரிசோதகர் வ. பி. போ. ச), திருமதி மகாலெட்சுமி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கமலாம்பிகை, காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, சண்முகநாதன்(உப்புக் கூட்டுத்தாபனம் ஆனையிறவு), மகேஸ்வரி ஆகியோரின் அருமை மாமனாரும், சுதாகரன் (கனடா), திருமதி சுதாமதி, மதி (கனடா), சுகுணாவதி (கனடா), திருமதி லதா, வேலு (கனடா), காலஞ்சென்ற நவதாஸ், கண்ணன் (கனடா), திருமதி உமா, விக்கினேஸ்வரன் (கனடா), இராஜகுமாரி (பிரான்ஸ்), பாஸ்கரன் (பிரான்ஸ்) பிரபாகரன் (U.K ), கிருபாகரன், ரமேஸ் (பிரான்ஸ்), உமேரிஸ் (U.K.), சதீஸ், சுரேஸ், சுதாகர் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (21 - 2 - 96) துன்னாலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஓடைக்காடு மயானத்திற்கு காலை 10.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மா. துரைராஜா
(மகன்)

மே / பா திரு. சிவனடியான்,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
(மான் நின்றகாடு) (40150)

2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 21-02-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org